## மத்தேயு எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | தூற்றுக்கூடை | முறத்தை விடச் சற்று நீளமாகவும் வாய்ப்பகுதி குறுகலாகவும் உள்ள ஒரு முறம் | 3:12 |
| 2 | பதர் | உள்ளீடற்ற (நெல்) மணி, பயனின்மை | 3:12 |
| 3 | பரிச்சேதம் | துண்டித்தல், வரைமுறைப்படுத்துதல், பகுத்தல் | 5:34 |
| 4 | சற்குணம் | நல்லியல்பு, உயர்பண்பு, பெருந்தன்மை | 5:48 |
| 5 | வசனி | பேசு, உரையாடு, பேசுதல் | 6:7 |
| 6 | ஆயத்துறை | சுங்கச் சாவடி | 9:9 |
| 7 | இரட்டு | சாக்கு உடை | 11:21 |
| 8 | ஆவேசம் | உணர்ச்சி வசப்பட்ட நிலை | 14:26 |
| 9 | சந்திரரோகி | வலிப்பு நோய் | 17:15 |
| 10 | தயாளம் | அருள், இரக்கம், பரந்த மனப்பான்மை, பெருந்தன்மை | 20:15 |
| 11 | வன்கண் | இரக்கமின்மை, கொடுமை | 20:15 |
| 12 | காப்புநாடா | வேதாகம வாசகப்பட்டை | 23:5 |
| 13 | தொங்கல் | அங்கியின் குஞ்சம் | 23:5 |
| 14 | சிங்காரி | அலங்கரி, ஒப்பனைசெய் | 23:29 |
| 15 | வெள்ளைக்கல் பரணி | படிகச் சிமிழ் | 26:7 |
| 16 | எத்தனமான | தகுந்த, ஆயத்தமான | 26:12 |
| 17 | லேகியோன் | 6000 போர்வீரர்கள் கொண்ட கூட்டம் | 26:53 |
| 18 | தூஷணம் | அவதூறு, பழி, நிந்தை, தீங்கு | 26:65 |
| 19 | பிரயத்தனம் | முயற்சி, விரைசெயல், பெருமுயற்சி | 27:24 |

## மாற்கு எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | வார்க்கச்சை | தோல்கச்சை | 1:6 |
| 2 | கீர்த்தி | புகழ் | 1:26 |
| 3 | துணிக்கை | துண்டு | 6:43 |
| 4 | தள்ளுதற்சீட்டு | மணவிலக்குச் சான்றிதழ் | 10:4 |
| 5 | சுதந்தரவாளி | சொத்துக்கு உரியவன் | 12:7 |

| சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|
| மூன்றாம் மணி | காலை ஒன்பது மணி | மத்தேயு 20:3 |
| ஆறாம் மணி | மதியம் பன்னிரண்டு மணி | மத்தேயு 20:5 |
| ஒன்பதாம் மணி | பிற்பகல் மூன்று மணி | மத்தேயு 20:5 |

# லூக்கா எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | பிரவேசித்து | சென்று, நுழைந்து | 1:9 |
| 2 | கடாட்சம் | அருள்பார்வை, கருணை | 1:24 |
| 3 | அகந்தை | அகங்காரம், நான் என்னும் பற்று, இருமாப்பு, செருக்கு | 1:51 |
| 4 | வர்த்தமானம் | நிகழ்கால நடப்பு | 1:65 |
| 5 | அருணோதயம் | சூரிய ஒளி முதலில் தோன்றும் காலைப்பொழுது, விடியல் | 1:79 |
| 6 | பிரசித்தம் | பலரும் அறிந்தது, நன்கு அறிமுகமானது, புகழ்பெற்றது | 2:17 |
| 7 | மாறுரை | விடை, பதில் | 2:47 |
| 8 | விசாரம் | மனக்கவலை, வருத்தம் | 2:48 |
| 9 | விருத்தி | வளர்ச்சி | 2:52 |
| 10 | உப்பரிகை | அரண்மனை போன்றவற்றின் மேல்மாடம் | 4:9 |
| 11 | நிமிட்டு | கிள்ளு | 6:1 |
| 12 | உத்திரம் | மரக்கட்டை | 6:42 |
| 13 | பரணி | சிறு ஜாடி, செப்பு | 7:37 |
| 14 | சம்பாஷணை | ஒருவரோடொருவர் பேசுதல், உரையாடுதல் | 9:30 |
| 15 | அலைக்கழித்தது | வலிப்புண்டாக்கியது | 9:42 |
| 16 | கலப்பை | மாடு பூட்டி நிலத்தை உழுவதற்குப் பயன்படும் (மரத்தாலான) கருவி | 9:62 |
| 17 | பாத்திரன் | தகுதியானவன் | 10:6 |
| 18 | நீர்க்கோவை | சளி, நீர்க்கோப்பினால் உண்டாகும் கபம், உடலின் புழையிடங்களில் நீர் திரண்டு தேங்கும் நோய் | 14:2 |
| 19 | அகத்தியம் | தவறாமல், அவசியமாக, கட்டாயம் | 14:18 |
| 20 | திராணி | சக்தி, பெலன் | 14:30 |
| 21 | பரம் | கடவுள், மேலுலகம் | 15:18 |
| 22 | உக்கிராணம் | வீட்டுச் சரக்கறை | 16:1 |
| 23 | மெச்சு | போற்று, வியந்து பாராட்டு | 16:8 |
| 24 | மாள்(ளு) | தீர், செலவாகு, அழி | 16:9 |
| 25 | பரியாசம் | ஏளனம் | 16:14 |
| 26 | அவம் | பயனின்மை, வெற்றுநிலை | 16:17 |
| 27 | இரத்தாம்பரம் | செந்நிறமுள்ள, சிவப்பான | 16:19 |
| 28 | சம்பிரமம் | களிப்பு, பேருவகை, ஆடம்பரம் | 16:19 |
| 29 | துணுக்கு | துண்டு, சிறு பகுதி | 16:21 |
| 30 | தரித்திரன் | ஏழை | 16:22 |
| 31 | வருஷித்து | பெய்து | 17:29 |
| 32 | திரிகை திரிக்கிற | மாவு அரைக்கிற | 17:35 |
| 33 | அலட்டு | வருத்து | 18:5 |
| 34 | திண்டி | உணவு | 21:34 |
| 35 | வேவுகாரர் | ஒற்றர் | 20:20 |
| 36 | இராயன் | சீசன் | 20:24 |

## யோவான் எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | தண்டுவலி | படகுத் துடுப்பைத் தள்ளு | 6:19 |
| 2 | துடுப்பு | படகு வலிக்கும் பட்டையான முனையுடைய நீண்ட மரக்கோல், அகப்பை (மரக்கரண்டி) | - |
| 3 | கனவீனம் | அவமதிப்பு | 8:49 |
| 4 | வைது | பழித்து | 9:28 |
| 5 | இராத்தல் | சுமார் முந்நூற்று இருபது கிராம் | 12:3 |
| 6 | புயம் | கரம்/ஆற்றல் | 12:38 |
| 7 | முகாந்தரம் | காரணம் | 15:25 |
| 8 | தளவரிசை | தளம் அமைத்தல், கற்பரப்பு | 19:13 |
| 9 | நியாயாசனம் | நீதி இருக்கை | 19:13 |
| 10 | கபாலம் | மண்டையோடு | 19:17 |
| 11 | ஸ்தலம் | இடம் | 19:17 |
| 12 | கரியபோளம் | சந்தனத் தூள் | 19:39 |

## அப்போஸ்தலருடைய நடபடிகள் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | ஆதினம் | அதிகாரம் | 1:7 |
| 2 | அநீதி | நீதிக்குப் புறம்பானது, அநியாயம் | 1:18 |
| 3 | சடிதி | விரைவாக, தாமதமின்றி | 2:2 |
| 4 | உபாதி | துன்பம், வேதனை, தடை, நோய் | 2:24 |
| 5 | கரடு | வளர்ச்சி குன்றியது | 3:7 |
| 6 | உபகாரம் | உதவி, நன்மை | 4:9 |
| 7 | கிரயம் | விலைப்பணம் | 4:34 |
| 8 | அவம் | பயனின்மை, வெற்றுநிலை | 5:36 |
| 9 | தர்க்கம் | விவாதம் | 6:9 |
| 10 | பிச்சு | பித்து, பைத்தியம் | 8:23 |
| 11 | நிருபம் | கடிதம், மடல் | 9:2 |
| 12 | கைலாகுகொடு | உடல்வலி அற்றவருக்குக் கைகொடுத்துத் தாங்கு | 9:8 |
| 13 | திருஷ்டாந்தம் | மெய்பித்து, எண்பித்து | 9:22 |
| 14 | எத்தனம் | முயற்சி, முன்னேற்பாடு, ஆயத்தம் | 9:29 |
| 15 | பட்டாளம் | இராணுவம், போர்ப்படை, கூட்டம், திரள் | 10:1 |
| 16 | கபடம் | வஞ்சகம் | 13:10 |
| 17 | பரதேசி | அன்னியன் | 13:17 |
| 18 | அமளி | கூச்சலும் குழப்பமும், ஆரவாரம் | 14:5 |
| 19 | பூஜாசாரி | அர்ச்சகர் | 14:13 |
| 20 | பிரயத்தனம் | முயற்சி, விரைசெயல், பெருமுயற்சி | 16:7 |
| 21 | யுக்தி | செயல் நிறைவேற்றத்திற்கான வழிமுறை உத்தி, திட்டம் | 17:29 |

## அப்போஸ்தலருடைய நடபடிகள் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 22 | விகற்பம் | வேறுபாடு, கருத்து வேறுபாடு, மனக்கோணல், தவறான கண்ணோட்டம் | 18:13 |
| 23 | கிரமம் | ஒழுங்கு, முறைமை, பாங்கு, ஒழுங்குமுறை, நன்னெறி | 18:23 |
| 24 | சாதுரியம் | சாமர்த்தியம், அறிவு நுட்பம், கூர்மதி | 18:24 |
| 25 | வித்தியாசாலை | வித்தியாலயம், கல்விச்சாலை, பள்ளி | 19:9 |
| 26 | உறுமால் | தலைப்பாகை, முண்டாசு | 19:12 |
| 27 | கச்சை | அங்கியின் இடுப்புப் பட்டை | 19:12 |
| 28 | தேசாந்தரி | அயல்நாட்டவன் | 19:13 |
| 29 | அரங்கசாலை | நாடக, நாட்டிய மேடை | 19:29 |
| 30 | சம்பிரதியானவன் | அவைத்தலைவன், ஆணையர் | 19:35 |
| 31 | பரிசாரகன் | கோவில் பணியாள், கோவில் திருமண வீடு போன்றவற்றில் சமையல் செய்பவர் | 19:35 |
| 32 | சேனாபதி | படைத்தலைவன், தளபதி | 21:31 |
| 33 | தீது | தீமையானது, தீமை தருவது, குற்றம், பாவச்செயல் | 23:5 |
| 34 | சர்ப்பனை | வஞ்சகம், ஏமாற்று, கபடம் | 23:16 |
| 35 | பிராது | முறையீடு, புகார் | 24:1 |
| 36 | யதார்த்தம் | வெளிப்படை, நடைமுறையிலானது, ஒளிவு மறைவற்றது | 24:9 |
| 37 | ரூபி | மெய்ப்பி, உறுதிப்படுத்து | 24:13 |
| 38 | அபத்தம் | அறிவுக்கு ஒவ்வாதது, பொருத்தமற்றது, குற்றம், வழு | 25:11 |
| 39 | அபயம் | அடைக்கலம், பாதுகாப்பு, அச்சமின்மை | 25:11 |
| 40 | தளவாடம் | போர்த் தொழிலுக்கான கருவிகள், தொழிலுக்குத் தேவையான செயற்கருவிகள் | 27:19 |
| 41 | சுக்கான் | கப்பலைத் திசை திருப்பும் கருவி | 27:40 |
| 42 | விஸ்திரி | விரிவாக்கு | 28:23 |

## ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | அநுபோகம் | உடைமை, பழக்கம், இன்பநுகர்ச்சி | 1:26 |
| 2 | விரகதாபம் | காதலர்களுக்குப் பிரிவில் தோன்றும் வேதனை, பிரிவுத்துயர், வேட்கை கொண்டு காமத்தீயால் பற்றிக்கொள்வது | 1:27 |
| 3 | வன்மம் | ஆழ்ந்த பகையுணர்வு | 1:29 |
| 4 | துராகிருதம் | கெட்ட நடத்தை, ஒழுக்கக் கேடு | 1:30 |
| 5 | வஸ்து | பொருள் | 9:20 |
| 6 | சமுசயம் | ஐயம், தெளிவின்மை, தயக்கம், ஐயுறவு | 14:23 |
| 7 | தர்மசகாயம் | பொருளுதவி | 15:31 |

## கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | சிற்பாசாரி | கட்டட கலைஞன் | 3:10 |
| 2 | விரதத்துவம் | தற்கட்டுப்பாடு, உணர்ச்சியை அடக்குதல் | 7:5 |
| 3 | அவத்தம் | பயனற்றது | 9:15 |
| 4 | சிலம்பம் | கழியை இரு கைகளாலும் பிடித்துச் சுழற்றித் தாக்குதலும், தாக்குதலைத் தடுத்தலுமாகிய பயில்கலை | 9:26 |
| 5 | கிரமம் | ஒழுங்கு, முறைமை, பாங்கு | 14:40 |

## கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | நற்கந்தம் | நறுமணம், வாசனை | 2:15 |
| 2 | உபசாரம் | நற்சான்று | 3:1 |
| 3 | உதாரத்துவம் | கொடை, வள்ளன்மை | 8:2 |
| 4 | தர்மசகாயம் | அறப்பணி, பொருளுதவி | 9:1 |
| 5 | லோபத்தனம் | தகா விருப்புடைய, வேண்டாவெறுப்புடன் | 9:5 |
| 6 | உபாயம் | (செயல் நிறைவேற்ற) வழிமுறை, தந்திரம் | 12:16 |
| 7 | அத்தாட்சி | நிரூபணம் | 13:3 |

## கலாத்தியருக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | சுயாதீனம் | தன்னுரிமை, சுதந்திரம், விடுதலை வாழ்வு | 2:4 |
| 2 | நாழிகை | 24 நிமிடம் கொண்ட ஒரு கால அளவு | 2:5 |
| 3 | அந்நியோந்நியம் | நெருக்கம், அன்பின் பரிமாற்றம், ஒத்துணர்வு | 2:9 |
| 4 | விருதா | பயனின்மை, வீண் | 2:21 |
| 5 | வியர்த்தம் | பயனின்மை, வீண் | 3:17 |
| 6 | உபாத்தி | ஆசிரியர், ஆசாரியர், வழிகாட்டி | 3:24 |
| 7 | புத்திரசுவிகாரம் | ஒருவரை தம் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுதல் | 4:4 |

## எபேசியருக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | அச்சாரம் | அடையாளம், முன் உறுதிப் பொருள் | 1:14 |
| 2 | துரைத்தனம் | ஆளுகை | 1:20 |
| 3 | காணியாட்சி | குடியுரிமை | 2:12 |
| 4 | திறம் | வகை, குலம், இனம் | 2:14 |
| 5 | சிலாக்கியம் | நல்லது, பொருத்தமானது, சிறப்பானது, புகழ், பாராட்டத்தக்கது, மேலானது | 2:18 |
| 6 | சத்துவம் | இயல்பு, சுபாவம், நற்குணம் | 3:7 |
| 7 | அநாதி | தொடக்கமில்லாதது, ஊழிகாலமாக | 3:9 |
| 8 | அநந்தம் | எல்லையற்றது, முடிவில்லாதது, கணக்கிட முடியாதது | 3:10 |
| 9 | ஐக்கியம் | ஒன்றாகிய நிலை, ஒற்றுமை, ஒரு செயல்நோக்கில் இணைந்திருத்தல் | 3:11 |
| 10 | ஈவு | கொடை, கொடைப்பொருள் | 4:7 |
| 11 | அவயவம் | உடலுறுப்பு | 4:25 |
| 12 | சிட்சை | கண்டிப்பது, கற்பிப்பது | 6:4 |
| 13 | லோகாதிபதி | உலகத்தின் அதிபதி | 6:12 |
| 14 | அவி | அணைந்துபோ | 6:16 |
| 15 | தலைச்சீரா | தலைக்கவசம் | 6:17 |

## பிலிப்பியருக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | பரியந்தம் | வரை | 1:5 |
| 2 | வர்த்தனை | பெருக்கம், வளர்ச்சி, முன்னேற்றம் | 1:26 |
| 3 | மருள் | மயங்கு, கலங்கு, மனம்தடுமாறு | 1:27 |
| 4 | தர்க்கிப்பில்லாமல் | வாதாடாமல், வாதம் செய்யாமல் | 2:16 |
| 5 | சுன்னத்துகாரன் | உறுப்பு சிதைப்போன் | 3:2 |
| 6 | இலச்சை | மானக்கேடு | 3:19 |
| 7 | மனரம்மியம் | திருப்தி, மனநிறைவு | 4:11 |

## கொலோசெயருக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | ஸ்திரம் | திடம், உறுதி | 1:22 |
| 2 | பிரயாசம் | உழைப்பு, வருத்தம், முயற்சி | 1:29 |
| 3 | நயவசனிப்பு | இனிமையாகப் பேசி ஏமாற்றுதல், போலி நடிப்பு, கபட வேடம் | 2:4 |
| 4 | துரைத்தனம் | ஆளுகை | 2:10 |

## தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | பிரவேசம் | நுழைதல், நுழைவு | 1:9 |
| 2 | துராசை | இழிந்த, தகாத இச்சை, தீயநோக்கம் | 2:3 |
| 3 | அசட்டை | புறக்கணிப்பு, அலட்சியம் | 4:8 |
| 4 | சடிதி | சீக்கிரம், விரைவாக | 5:3 |

## தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | போதகசமர்த்தன் | கற்பிக்கும் ஆற்றலுடையவன், போதிக்கும் திறமையுடையவன் | 3:2 |
| 2 | நூதனம் | புதுமை, பழக்கப்படாத தன்மை, முன்பின் ஆறியாமை | 3:6 |
| 3 | பிராது | குற்றச்சாட்டு, முறையீடு, புகார் | 5:19 |
| 4 | சம்சயம் | ஐயம், தெளிவின்மை, தயக்கம், ஐயுறவு, அயிர்ப்பு, அவநம்பிக்கை | 6:4 |

## தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | பரிகரி | விலக்கு, அகற்று, நீக்கு | 1:10 |
| 2 | தண்டு | இணை, சேர் | 2:4 |
| 3 | சேவகம் | இறைவனுக்கு அல்லது பெரியோர்களுக்குச் செய்யும் தொண்டு, உயர்நிலையில் உள்ளவர்களுக்குச் செய்யும் ஊழியம் | 2:4 |
| 4 | மல்யுத்தம் | ஒருவரையொருவர் பற்றிப்பிடித்துத் தரையில் விழச்செய்யும் உடல்வலிமை சார்ந்த விளையாட்டுப் போட்டி | 2:5 |
| 5 | பாதகன் | பெரும் பாவம் செய்தவன், இழிந்தவன் | 2:9 |
| 6 | அரிபிளவை | சதையழுகல் நோய், புற்று நோயென | 2:17 |
| 7 | அயுக்தமுமான | அறிவற்ற, முட்டாள்தனமுமான | 2:23 |
| 8 | புத்தியீனம் | மடத்தனம் | 2:23 |

## தீத்துவுக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | உக்கிராணக்காரன் | பொறுப்பாளன் | 1:7 |
| 2 | விகற்பம் | வேறுபாடு, கருத்து வேறுபாடு, மனக்கோணல், தவறான கண்ணோட்டம் | 2:8 |
| 3 | லௌகீகம் | உலக நடைமுறை, உலகியல் பொருள்கள் மீதான பற்று, ஆன்மைத்துறை சாராமை | 2:12 |

## எபிரெயருக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | சவம் | உயிரற்ற உடல், பிணம், பிரேதம் | 3:17 |
| 2 | கருக்கு | கூர்மை, வெட்டும் கருவிகளின் கூர்மையான பல் போன்ற பகுதி | 4:12 |
| 3 | கணு | கைவிரல், முதுகுதண்டு முதலியவற்றில் காணப்படும் இணைப்பு | 4:12 |
| 4 | ஊன் | இறைச்சி, புலால், தசை, உடல் | 4:12 |
| 5 | விஸ்தாரம் | பரந்து அக்ன்றிருத்தல், விசாலம், விரிவு | 5:11 |
| 6 | விபரீதம் | இயல்புக்கு எதிரானது, முரண்பாடானது, முறைகெட்டது, ஏறுமாறானது | 12:3 |
| 7 | சிட்சி | தண்டித்துத் திருத்து, கற்பி | 12:7 |

## யாக்கோபு எழுதின பொதுவான நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | சித்திப்பது | கிடைப்பது, வாய்ப்பது, கைகூடுவது | 4:2 |
| 2 | சஞ்சலம் | மனக்கலக்கம், மன அமைதியின்மை, ஆழ்துயரம் | 4:9 |
| 3 | சம்பாத்தியம் | வருமானம், பணம் ஈட்டுவது | 4:13 |
| 4 | பொட்டரித்துப்போயின | பூச்சிகளால் அரிக்கப்பட்டுவிட்டன | 5:2 |
| 5 | திருஷ்டாந்தம் | எடுத்துக்காட்டு | 5:10 |

## பேதுரு எழுதின பொதுவான முதலாம் நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | பட்சபாதம் | பாரபட்சம், ஆளைப் பார்த்து | 1:17 |
| 2 | பிரீதி | பிரியம், அன்பு, மகிழ்ச்சி, உவகை | 2:19 |
| 3 | உதாசனம் | பழிச்சொல், நிந்திப்பது, இழிவுபடுத்தும் சொல் | 3:9 |

## பேதுரு எழுதின பொதுவான இரண்டாம் நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | திவ்விய | தெய்வீக, தெய்வத் தன்மை வாய்ந்த | 1:3 |
| 2 | காருணியம் | கருணை, பரிவு, இரக்க உணர்ச்சி | 1:3 |
| 3 | கிரயத்துக்குக் கொண்ட | விலைகொடுத்து மீட்ட | 2:1 |

## யூதா எழுதின பொதுவான நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | ஆதிமேன்மை | ஆளும் அதிகாரம் | 1:6 |
| 2 | மகத்துவம் | மாட்சிமை | 1:8 |
| 3 | முகஸ்துதி | முகப்புகழ்ச்சி, போலிப்புகழ்ச்சி | 1:16 |

## யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | கோத்திரம் | குலம் | 1:7 |
| 2 | கலிக்கம் | கண் மருந்து, உணர்விழந்த அல்லது தீராத தலைவலியுடைய ஒருவரைக் குணமாக்கக் கண்ணிலிடப்படும் மருந்து | 3:18 |
| 3 | தோய்த்து | துவைத்து | 7:14 |
| 4 | தூபவர்க்கம் | நறுமணப் பொருள்கள் | 8:3 |
| 5 | எட்டி | கசப்பு மணம் உடைய செடி | 8:11 |
| 6 | ஞானார்த்தம் | உருவகம் | 11:8 |
| 7 | சத்துவம் | அதிகாரம் | 13:14 |
| 8 | இரத்தாம்பரம் | கருஞ்சிவப்பு | 17:4 |
| 9 | சல்லா | இழை நெருக்கமில்லாதத் துணிவகை, விலையுயர்ந்த மெல்லிய ஆடை | 18:11 |